**வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873– எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் பட்டியல் 2, பிரிவு II, பீ 3 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், விவசாய அமைச்சு வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, மொனராகலை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை முன்னேற்றுதல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மேலும், சிறுநிலவுடைமை விவசாயிகளுக்கு போட்டிமிக்கதும் சந்தைவாய்ப்புள்ளதுமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் சந்தைத் தேவைப்பாட்டிற்கு ஏற்றவகையில் அவர்களது இயலளவை முன்னேற்றி வர்த்தகமயமாக்கலை நோக்கி நகர்வதற்கு ஆதரவளிப்பதற்கான நடவடிக்கைகளை வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயமான ரூபா 9,175.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 64.87 மில்லியன் தொகை சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும் ரூபா 5,040 மில்லியனிற்கு சமமான யூரோ 25 மில்லியன் கண்டி, அம்பாறை, கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற ஏனைய மாவட்டங்களில் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு ஐரோப்பிய ஆணைக்குழு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திடமிருந்து பெறப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் 2024 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடு | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உலக வங்கி/ ஐடிஏ இன் ஐ.அ.டொலர் 32.6 மில்லியன் கடன் மீதி அறிக்கையிடல் திகதியில் LKR பெறுமதிக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை, இதன் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள கடன் மீதி மற்றும் செயற்திட்டச் செலவின மீதி என்பன ரூபா 5,827 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 5,827 | உலக வங்கியிடமிருந்து CBSL ஆல் பெறப்பட்ட நிதிகள், பணவளிப்பு திகதியில் நிலவிய நாணயமாற்று விகிதத்தில் LKR இற்கு மாற்றப்படுகிறது. அதேபோல், CBSL ஆல் செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்படும் நிதிகள் மீளப்பெறுதல்களின் போது நிலவிய நாணயமாற்று விகிதத்தில் மாற்றப்படுகிறது. | செயற்திட்டத்தால் பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நி.பி. 756 மற்றும் 757 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் நியமனம் ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 15 இல் அல்லது அதற்கு அண்மைய திகதியில் செய்யப்பட வேண்டும். வருடாந்த | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்கப்படுகின்றன.<br><br>மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டு, தலைமை அலுவலகம் தவிர அனைத்து | நிதிப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொருள் மெய்மையாய்வு சபை உரிய திகதியில் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மெய்மையாய்வு சபையின் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . மேலும், PMU அலுவலகம் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தியிருக்கவில்லை. | மாகாணங்களுக்கும் மெய்மையாய்வுகள் நடாத்தப்பட்டது. வேலை அழுத்தம் காரணமாக அதில் ஈடுபடவில்லை.<br><br>எனினும், பெரும்பாலான அலுவலக தளபாடங்கள் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது என்பதையும், அவை அமைச்சின் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும், மெய்மையாய்வு சபை செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்ட சொத்துக்களை சரிபார்த்துள்ளது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம். | |
| (ii) | நி.பி. 835 | இந்த செயற்திட்டம் PMU அலுவலகத்திற்கு ஆண்டின் போது இரண்டு கட்டிடங்களை கட்டிடங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கையை எடுக்காமல் வாடகைக்கு எடுத்திருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்கப்படுகின்றன. | நிதிப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 01/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் செயற்திட்ட உள்ளக கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்கப்படுகின்றன.<br><br>2023 ஆம் ஆண்டின் 3 ஆம் காலாண்டில் இருந்து கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | செயற்திட்ட வழிநடாத்தல் குழு (PSC) கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மூன்று செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. திட்டமிட்டவாறு செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்களை நடத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சில கூட்டங்களை கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் நடாத்த முடியவில்லை. | சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் பின்வரும் பெயர்களிலான 5 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

(அ) விவசாயி பயிற்சி மற்றும் இயலளவை கட்டியெழுப்புதல்
(ஆ) நவீன விவசாய தொழில்நுட்ப பூங்காக்கள் (ATDP)
(இ) உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு அபிவிருத்தி
(ஈ) பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை ஆதரவு
(உ) செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

விவசாய உற்பத்தியை அதிகரிப்பது, சந்தை அணுகலை மேம்படுத்துதல், சிறுநிலவுடைமை விவசாயிகளின் பெறுமதி சேர்க்கை மற்றும் செயற்திட்டப் பகுதிகளில் விவசாய வணிகத்தை மேம்படுத்துதல் என்பன செயற்திட்ட அபிவிருத்தி நோக்கமாகும். அந்த செயற்திட்டத்தின் முழு நோக்கத்தின் பிரகாரம் விவசாயிகளுக்கு அதிகாரம் அளித்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், இளைஞர்களை நவீன விவசாயத்தின்பால் ஈர்ப்பது என்பனவாகும். இலங்கை அரசாங்கத்தினால் கடன் வழங்கும் முகவரிற்கு வட்டிக் கட்டணமாக ரூபா 302.9 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அசல் செயற்திட்ட நோக்கங்கள் வேறுபட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கூறுகள் | | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | விவசாயி பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு | (i) | 2021 மார்ச் 31 இற்குள் தொடங்கப்பட்டிருக்காத 20 கொத்தணி செயற்திட்டங்கள் மற்றும் 20 முன்னோடி செயற்திட்டங்களின் பொது பட்டியலிடப்படாத கம்பனியை மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் கம்பனிகளுக்கு விநியோகிப்பதற்காக ரூபா 35 மில்லியன் பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் ஒரு பகுதி மாத்திரம் செயற்திட்டத்தால் பெறப்பட்டிருந்ததுடன் கோரப்பட்ட அளவுகள் தொடர்புடைய ஒப்பந்த விவரக்குறிப்புகளின் பிரகாரம் சரியாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்காமல் விநியோகிக்கப்படாத பொருட்களுக்கும் செலுத்தப்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.<br><br>செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் (PAD) 9(அ) பிரிவின் பிரகாரம், அடிப்படை அலுவலக உபகரணங்களை வழங்கும் விவசாயி கம்பனிகளுக்கு (பொது பட்டியலிடப்படாத கம்பனிகள்) செயற்திட்டம் உதவ முடியும். அதன் பிரகாரம் அந்த கம்பனிகளுக்கு ரூபா 35,372,436 பெறுமதியான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை கடைபிடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | (ii) | 2023 யூன் 30 அளவில் 21 கம்பனிகள் முன்னோடி செயற்திட்டத்திற்காக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் 18 கம்பனிகளில வணிகச் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 4 கம்பனிகளுக்கு அலுவலக வளாகங்கள் காணப்படவில்லை. அடுத்த ஒன்றரை வருடத்தில் அந்த நோக்கங்களை அடைந்துகொள்ள முடியுமா என்பது கணக்காய்வின் போது பிரச்சனையாக உள்ளது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்கப்படுகின்றன. சில கம்பனிகள் ஏற்கனவே தங்கள் வணிக நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன, மீதமுள்ள கம்பனிகள் தங்கள் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கான செயன்முறைகளில் உள்ளன. | செயற்திட்டத்தின் செயற்பாட்டு காலப்பகுதியினுள் தொடர்புடைய இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நவீன விவசாய தொழில்நுட் ப பூங்காக்கள் | (i) | கம்போல குருந்துவத்த பிரதேசத்தில் 300 காய்ந்த மிளகாய் பயனாளிகள் கொண்ட குழுவை நிறுவுவதற்கு நடுகை பொருட்கள் மற்றும் விவசாய உபகரணங்களை வழங்குவதற்கு மத்திய மாகாண செயற்திட்ட அலுவலகம் ரூபா 168.2 மில்லியன் தொகை செலவிட்டுள்ளது. இச்செயற்திட்டத்தில் பங்கேற்கக்கூடிய விவசாயிகளின் எண்ணிக்கை 177 ஆக இருந்ததால், 123 பேருக்கு கொள்வனவு செய்த கருவிகள் விளைவற்ற செலவினமாகியிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்கப்படுகின்றன.<br><br>300 விவசாயிகளுடன் இந்த மிளகாய் கொத்தணியை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. அதன் பிரகாரம் திட்டமிட்ட பயிர்ச்செய்கைக்கு தேவையான உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்குச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. பயிர்ச்செய்கையின் போது உள்ளீடுகள் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும் என்ற காரணத்தால் இது தேவைப்பட்டது. எனினும், நாட்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு, இரசாயன உரம் போன்றவற்றால் விவசாயிகளை பயிர்ச்செய்கைக்கு ஊக்கமளிக்காத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், தற்போது 240 விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். | நிதியை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் 300 விவசாயிகள் ஒவ்வொன்றும் அரை ஏக்கரில் மிளகாய் பயிரிடுவார்கள் என்றும், ஒரு ஏக்கருக்கு 03 தொண்களில் இருந்து 450 தொண்கள் காய்ந்த மிளகாயை உற்பத்தி செய்து, 1 கிலோகிராம் ரூபா 600 இற்கு விற்பதன் மூலம் ரூபா 270 மில்லியன் வருமானம் ஈட்டுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பயிரிட்டு, பயிர்ச்செய்கையை கைவிட்ட விவசாயிகளின் மொத்த எண்ணிக்கை 177 ஆக இருந்தது. இச்செயற்திட்டத்திற்கு 123 விவசாயிகள் பங்களிக்க முடியவில்லை. | தொடக்க நிலையில் குறைவான விவசாயிகளின் பங்களிப்பு இருந்தமை இணங்கப்படுகிறதுடன் தற்போது 240 விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர், அடுத்த பருவத்தில் இது மேலும் அதிகரிக்கப்படும். | விரும்பிய இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில், செயற்திட்டத்தின் பணிகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்த வேண்டும். |
| (iii) | மிளகாய் அதிகம் பயிரிடப்படும் வடமத்திய மாகாணம் போன்ற மலைப்பாங்கான பகுதிகளில் சமவெளி நிலத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதால், ஹெல்மலு முறையால் மிளகாய் மழைநீர் மற்றும் வெள்ளத்தால் அழிந்து பல இடங்களில் காணியின் அரை ஏக்கர் நிலத்தைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. மேலும், குழாய்களின் பயன்பாடு மற்றும் சொட்டுநீர் முறைமை முடக்கப்பட்டது. குருந்துவத்தை பிரதேசத்தில் மிளகாய் உலர்த்தும் இயந்திரம் பொருத்தப்பட்டிருந்த போதிலும், மிளகாய் சுமந்து செல்லும் விவசாயிகள் பண்ணையில் இருந்து 13-40 கிலோமீற்றர் தூரம் பயணித்து உலர்த்தும் இயந்திரத்தை சென்றடைய வேண்டியிருந்தமையினால் உலர்த்தும் இயந்திரத்தின் பாவனையும் தோல்வியடைந்திருந்தது. | இந்த பகுதி மிளகாய் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமானதாகும். இந்த பயிர்ச்செய்கையில் இரண்டு பயிர்கள் ஏற்கனவே அறுவடை செய்யப்பட்டுள்ளன. மிளகாய் பயிரிடப்படும் ஏனைய பகுதிகளை பொறுத்த வரையில் இந்த பகுதியும் மிளகாய் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாகும். | விரும்பிய இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில், செயற்திட்டத்தின் பணிகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்த வேண்டும். |
| (iv) | 300 விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு, விவசாயிகளை அடையாளம் காண்பதற்கு முன்னதாக ரூபா 173 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தின் பெறுகை STEP மூலம் உலக வங்கியின் அங்கீகாரத்தை பெற்று, போட்டி கேள்வி நடைமுறையைப் பின்பற்றி | விரும்பிய இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில், செயற்திட்டத்தின் பணிகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | அடையாளம் காணப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 177 ஆக இருந்ததுடன் 123 விவசாயிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 71 மில்லியன் பெறுமதியான விவசாய உபகரணங்கள் பயன்பாடின்றி காணப்பட்டன. | மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், அதற்கு கணிசமான நேரம் தேவைப்படுகிறது. மேலும், பருவத்திற்குள் பயிர்ச்செய்கை செயன்முறைகளை தொடங்க வேண்டும். இந்தச் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, விவசாயிகளின் தெரிவு முடிவடையும் வரை விவசாய உபகரணங்களுக்கான பெறுகைகளை தாமதப்படுத்த முடியாது. பெரும்பாலான விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு பயிர்ச்செய்கை தொடங்கப்பட்டிருந்ததால், சொத்துக்கள் விளைவற்றிருப்பதில் சிக்கல் ஏற்படாது. | வேண்டும். |
| (v) | விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட விவசாய உபகரணங்களை பௌதீக மெய்மையாய்வு செய்த போது, 213 கல்வனைஸ்ட் (GI) குழாய்கள் மேலதிகமாக இருந்தது, பூச்சி நிருபிக்கப்பட்ட 177 றோல்கள் பற்றாக்குறை, 139 தண்ணீர் பம்புகள் பற்றாக்குறை, 07 அடி பெறுமதியில் பற்றாக்குறை மற்றும் 12,105 நாற்று கதிர்கள் பற்றாக்குறை மற்றும் 2.8 கிலோகிராம் மிளகாய் விதைகள் பற்றாக்குறை என்பன காணப்பட்டன. மணிகள் மற்றும் சுருள்களின் பெறுதல்கள் மற்றும் வழங்கல்கள் பதிவு செய்யப்படாததால், குறைபாடுகள் மற்றும் மிகைகளை இனங்காண முடியவில்லை. | அந்த நேரத்தில் சில பயனாளி விவசாயிகள் அந்தந்த பொருட்களை கையேற்பதற்கு தவறியதால், இருப்புக்கள் மேலதிகமாக உள்ளது. எனினும், சொத்துக்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. | செயற்திட்ட சரக்குகள் மற்றும் இருப்புக்கள் தொடர்பாக நி.பி. 751 பின்பற்றப்பட வேண்டும். |
| (vi) | பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்ட 20 பயிரிடப்பட்ட நிலங்களில், ஒரு காணியைத் தவிர, மீதமுள்ள 19 பயிரிடப்பட்ட நிலங்களில் | விவசாயிகளிடமிருந்து பயன்படுத்தப்படாத உபகரணங்களை திரும்பப் பெற நடவடிக்கை | விரும்பிய இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில், செயற்திட்டத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ள விவசாயிகள் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தியிருக்கவில்லை. அந்த 19 பயிரிடப்பட்ட நிலங்கள் வெள்ளம், மழை அல்லது குளிர் காலநிலை காரணமாக தோல்வியடைந்திருந்தன. | எடுக்கப்பட்டு, செயற்திட்டத்தில் சேர விரும்பும் புதிய விவசாயிகளுக்கு மீண்டும் வழங்கப்படும். | பணிகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்த வேண்டும். |
| (vii) | ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் அமுல்ப்படுத்தப்பட்ட பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேசத்தில் கலப்பின சோள விதை உற்பத்தி செயற்திட்டம் ரூபா 90 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தொடங்கப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக 50 விவசாயிகளும், விவசாயிகளுக்குச் சொந்தமான 50 ஏக்கர் நெற்பயிர்களும் கையேற்கப்பட்டன. செயற்திட்ட அளவுகோல்களின் பிரகாரம் விவசாயிகளைத் தெரிவு செய்யாதமை, சரியான பயிரிடல் நிலத்தைத் தெரிவு செய்யாதமை, பயிரிடல் நிலத்திற்கு ஏற்ற விதைகளை அடையாளம் காணாதமை, விதைகள், உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்கள் உரிய காலத்திற்குள் வழங்கப்படாததால் செயற்திட்டம் முற்றிலும் தோல்வியடைந்திருந்தது. செலவிடப்பட்ட ரூபா 2.67 மில்லியன் தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இப்பிரதேசம் சோளப் பயிர்ச்செய்கைக்கு பிரசித்தி பெற்றதாலும், ஆலோசகர்களால் பரிந்துரைக்கப்பட்டதாலும், கந்தேகெட்டிய பிரதேசத்தில் கலப்பின சோள விதை உற்பத்தி கொத்தணி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இந்த தொகுதியை அம்பாறை மாவட்டத்திற்கு மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. | விரும்பிய இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில், செயற்திட்டத்தின் பணிகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்த வேண்டும். |
| (viii) | ரூபா 32 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தையும் 100 பயனாளிகளையும் கொண்ட முருங்கை செயற்திட்டத்திற்கு ரூபா 28.4 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், முருங்கை விதைகளாக உள்ளூர் வளமூலங்களை பயன்படுத்தாமல் வெளிநாட்டு விதை வளமூலங்களைப் பயன்படுத்தியதால் முருங்கை பயிர்ச்செய்கை வெற்றியடையவில்லை. அதன் பிரகாரம் ஏற்பட்ட ரூபா 28.4 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்கப்படுகின்றன.<br><br>கொவிட் நிலைமை, விவசாயிகளின் மனப்பாண்மை, பொருளாதார சூழல் காரணமாக வியாபாரத்தில் ஏற்பட்ட பின்னடைவு ஆகியவை வெல்லவாயவில் முருங்கை பயிர்ச்செய்கை | விரும்பிய இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில், செயற்திட்டத்தின் பணிகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் செலவினம் பயனற்றதாகியிருந்தது. | தோல்விக்கு முக்கிய காரணிகளாகும். விவசாயிகள் படிப்படியாக மற்ற இடைப்பயிர்களுடன் சேர்ந்து முருங்கை பயிர்ச்செய்கையில் மீண்டும் ஈடுபடுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ix) | மிளகாய் கொத்தணி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக வடமத்திய மாகாண செயற்திட்ட அலுவலகம் 11,600 கால்வனைஸ்ட் குழாய்களை கொள்வனவு செய்திருந்தது. அவற்றில், 9,600 கல்வனைஸ்ட் குழாய்கள் மாத்திரமே பொருட்கள் பெறுதல் குறிப்புக்களின் (GRN) பிரகாரம் பெறப்பட்டன. 2,000 கல்வனைஸ்ட் குழாய்கள் களஞ்சியத்தால் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் 2,000 குழாய்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வழங்குநர் மூலம் கலவனைஸ்ட் குழாய்களின் முழு அளவும் வழங்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | விரும்பிய இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில், செயற்திட்டத்தின் பணிகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்த வேண்டும். மேலும் நி.பி. 751 செயற்திட்ட சரக்கு மற்றும் இருப்புகள் தொடர்பாக கையாளப்பட வேண்டும். |
| (x) | அனுராதபுரம் மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட காளான், கற்றாழை, முருங்கைக்காய் மற்றும் பாகற்காய் ஆகியவற்றின் முன்னோடி செயற்திட்டத்திற்காக முறையே ரூபா 13.517 மில்லியன், ரூபா 23.77 மில்லியன், ரூபா 32.497 மில்லியன் மற்றும் ரூபா 11.9 மில்லியனான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனவே, மொத்த செலவினம் ரூபா 81.7 மில்லியனாக இருந்தது. ஆனால், அந்த முன்னோடி செயற்திட்டங்களில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் முறையான தொழில்நுட்பம் மற்றும் சந்தை இல்லாததால் விவசாய நடவடிக்கைகளை கைவிட்டிருந்தனர். எனவே, மேற்படி விவசாயத்துக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் விளைவற்றிருந்தன. | தற்போது காளான் வளர்ப்பு அமுல்ப்படுத்தப்பட்டு வருகிறது. கொவிட் காலத்தில் கற்றாழை வாங்குபவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை, இதனால் விவசாயிகள் இந்த பயிர்ச்செய்கையை ஊக்கப்படுத்தினர். எனினும், கற்றாழைக்கு மாற்றீடாக பசன் பழம் பயிரிடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. | செயற்திட்டப் பணிகளை முறையாக திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் 2017 சனவரி 17 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் கண்காணிப்பு தகவல் முறைமையை (MIS) உருவாக்குவதற்காக 2018 நவம்பர் 15 வரை சுமார் 22 மாதங்கள் எடுக்கப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 15 இல், ரூபா 8 மில்லியன் பெறுமதிக்கு தனியார் கம்பனியொன்றிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இச் செயற்திட்டத்திற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் முழுமையான கண்காணிப்பு தகவல் முறைமை (MIS) வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டது. இந்த தகவல் முறைமை 2022 திசெம்பர் வரை முழுமையாக பூர்த்தி செய்யப்படாததுடன் செலவிட்ட ரூபா 5 மில்லியன் தொகை விளைவற்ற செலவினமாக இருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.<br><br>எனினும், 2022 ஆம் ஆண்டிலிருந்து மாகாண செயல்நடவடிக்கைத் திட்டங்களை உள்ளிடுவதற்கு மாகாணங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, அதன் பிரகாரம் அவர்கள் தங்கள் நிகழ்ச்சித்திட்டங்களை புதுப்பித்தனர். ஏனைய ஈடுபாடுகள் காரணமாக, மாகாண பதவியணியினரிற்கு இந்தப் பணியில் கலந்துகொள்ள போதிய நேரம் கிடைத்திருக்கவில்லை. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒப்பந்த அடிப்படையில் சமூக மற்றும் சுற்றாடல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு செயற்திட்டம் முடிவு செய்தது. அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக MIS ஐ தொடர்ந்து புதுப்பிப்பதற்கு அவர்கள் நியமிக்கப்பட்டனர்.<br><br>இந்த ஏற்பாட்டின் விளைவாக, 2023 ஆம் ஆண்டிற்கான மாகாண செயல்நடவடிக்கைத் திட்டங்கள் முறைமையில் புதுப்பிக்கப்படுகின்றன. மேலும், பயனாளிகளின் தரவை உள்ளிடுவதை பூர்த்தி செய்வதற்கு அவர்களுக்கு இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. | உரிய காலப்பகுதியினுள் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு செயற்திட்டம் பணியாற்ற வேண்டும். |
| (ஆ) | முறையான திட்டமிடல் இன்றி குறிப்பிட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தாததாலும், விவசாய அமைச்சும், முதன்மை தொழில்துறை அமைச்சும் இணைந்து செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு உடன்படிக்கைகளை மேற்கொண்டதாலும் அவை இரண்டு செயற்திட்டங்களாக அமுல்ப்படுத்தப்பட்டு, 2022 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 517 மில்லியன் பெறுமதியான 22 செயற்திட்டங்கள் 0 சதவீதம் | முகாமைத்துவத்தால் எந்த கருத்துரைகளும் வழங்கப்படவில்லை. | செயற்திட்டத்தை திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

முதல் 50 சதவீதம் வரையான பௌதீக முன்னேற்றத்தைக் கொண்டிருந்தன.

**3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்கான GOSL நிதியின் பாதீட்டு பங்களிப்பு ரூபா 40 மில்லியனாக இருந்தது. செயற்திட்டம் ரூபா 8.9 மில்லியன் GOSL நிதியை மாத்திரமே பயன்படுத்தியிருந்ததுடன் இது இணங்கப்பட்ட தொகையின் 23 சதவீதத்திற்கு சமமானதாகும். எனவே, 77 சதவீதம் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்கப்படுகின்றன.<br><br>அரசாங்க முகவர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வாக்குப்பணம் 118-02-03-39-2507(17) இன் கீழ் ரூபா 40 மில்லியன் தொகை வழங்கப்பட்டது. பெரும்பாலான கொடுப்பனவுகள் கடன்/ மானிய நிதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் நாட்டின் பாதீட்டு நிலைமை மற்றும் நிதிக் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, இந்த ஒதுக்கீட்டின் கீழ் குறைந்தபட்ச அளவில் செலவினத்தை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தகவல்களின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் விவசாயிகளின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஐ.அ.டொலர் 6.2 மில்லியன் அல்லது ரூபா 904.89 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டது. இதில் ரூபா 132 மில்லியன் தொகை 2022 செப்தெம்பர் மாதத்திற்குள் செலவிடப்பட்டிருந்தது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் நோக்கம் விவசாயிகள் தொடர்பான உற்பத்திச் சங்கங்களை உருவாக்குவதாகும். பயிற்சியின் முடிவில், கொத்தணி செயற்திட்டங்களில் விவசாயிகளுடன் தொடர்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் இருந்து செயற்திட்ட உத்தியோகத்தர்கள் விலகியிருந்தனர். இதனால், இச் செயற்திட்டத்தின் முன்னோடி குழுக்களில் இருந்து விவசாயிகள் விலகியிருந்ததுடன் விவசாயிகளின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்காக செலவிடப்பட்ட ரூபா 132 மில்லியன் விளைவற்ற செலவினமாகியிருந்தது. | விவசாயிகளுக்கான பயிற்சி நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில முன்னோடி செயற்திட்டங்கள் ISP நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதிகரிக்கப்பட்டுள்ளன. மேலும், முன்னோடி செயற்திட்டங்களுக்காக 21 பொது பட்டியலிடப்படாத கம்பனிகள் நிறுவப்பட்டன. | செயற்திட்ட நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் பிராந்திய அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய போட்டி கேள்வி (NCB) மற்றும் கடை முறை மூலம் பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பாக பெறுகை வழிகாட்டல் 8.9.1 இன் பிரகாரம் வழங்குநருடன் உடன்படிக்கையை மேற்கொண்டிருக்கவில்லை. கொள்வனவு தொடர்பான கோவைகளில் செயலாற்றல் பிணை பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. மேலும் பெறுகை வழிகாட்டலின் 5.4.10 இன் பிரகாரம் செயலாற்றல் பிணை அல்லது ஒப்பந்த பெறுமதியில் சில சதவீதம் நிறுத்தி வைக்கப்பட வேண்டும். ஆனால் ரூபா 473.378 மில்லியன் தொகையான 11 ஒப்பந்தங்கள் தொடர்பாக அத்தகைய நிறுத்திவைத்தல் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இணங்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் பொருட்கள் வழங்கப்பட்டன அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதற்கான ஆவணங்கள் எதுவும் பெறுகைக் கோவையில் காணப்படவில்லை. | முகாமைத்துவத்தால் எந்த கருத்துரையும் தெரிவிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் பெறுகையானது பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நாவலப்பிட்டி மிளகாய் பயிறர்ச்செய்கை செயற்திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கு முன்னர் 300 விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2022 செப்தெம்பர் இறுதியளவில், மூன்று விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாய நிலையங்களில் உபகரணங்களைப் பெற்றிருக்காத 86 பயனாளி விவசாயிகள் காணப்பட்டனர். மாத்தளையில் உள்ள பிரதி செயற்திட்ட அலுவலக வளாகத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விவசாயிகளை தெரிவு செய்யாமல் பொலித்தீன் கவர் ரோலை கொள்வனவு செய்ததன் காரணமாக ரூபா 32.224 மில்லியன் பெறுமதியான 380 பொலித்தீன் உறைகள் விளைவற்றிருந்தன. | முகாமைத்துவத்தால் எந்த கருத்துரையும் தெரிவிக்கப்படவில்லை. | செயற்திட்டப் பணிகளை முறையாக திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். |
| (இ) | மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழை பயிர்ச்செய்கை மற்றும் அம்பாறை மாவட்டத்தில் மிளகாய் பயிர்ச்செய்கை தொடர்பான விவசாயிகளுக்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 178.4 மில்லியன் பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்களின் இருப்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது அந்தந்த பயிர்ச்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. | பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகையானது பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அதிக நன்மைகளை |

| | | | |
|---|---|---|---|
| | களுதேவலி பொருளாதார நிலையம் மற்றும் வெள்ளந்தி பிரதேச செயலகம் மற்றும் கோமாரி விவசாய நிலையம் ஆகியவற்றில் அந்த பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கிடைக்கப்பெற்றன. | | அளிக்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சொத்துக்களின் பயன்பாடு வினைத்திறனாக இருக்க வேண்டும். |
| (ஈ) | தலவ வாழை பயிர்ச்செய்கை செயற்திட்டங்களுக்கு ரூபா 6 மில்லியன் பெறுமதியிலான தெளிப்பான் நீர் முறைமைகளை வழங்குவதற்கும் நிறுவுவதற்கும் பெறுகை பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் தொழில்முறை அறிவும் அனுபவமும் உள்ள பொருத்தமான ஒருவரால் விவரக்குறிப்புகள் மற்றும் திட்டங்களை தயாரித்து உரிய அதிகாரியால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இது முறைப்படி செய்யப்பட்டது என்பதற்கு எழுத்துமூல சான்று காணப்படவில்லை. பெறுகைக் குழுவின் ஒரு உறுப்பினரும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஒரு உறுப்பினரும் தொடர்புடைய அறிக்கைகளில் கையெழுத்திடாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தெளிப்பு நீர்ப்பாசன முறைமையானது, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக பரிந்துரைக்கப்பட்ட நீர்ப்பாசன முறைமைகள் காணப்படாததால் தலவவில் உள்ள மிளகாய்க் கொத்தணிக்காகப் பயன்படுத்துவதற்கு தற்காலிக நடவடிக்கையாக கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்தது. பரிந்துரைக்கப்பட்ட நீர்ப்பாசன முறைமைகளில் ஒன்று, மாற்றுப் பயிர்களின் ஏனைய பயன்பாட்டிற்காக PUC இற்கு தெளிப்பு நீர்ப்பாசன முறைமை வழங்கப்படும். | பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் தொழில்முறை அறிவு மற்றும் அனுபவமுள்ள பொருத்தமான நபரால் விவரக்குறிப்புக்கள் மற்றும் திட்டங்களைத் தயாரித்து, பொருத்தமான அதிகாரியின் அங்கீகாரத்தை பெற வேண்டும். |
| (உ) | ரூபா 23 மில்லியன் பெறுமதியான 23 இலத்திரனியல் தராசுகளின் பெறுகையின் போது முறையான மதிப்பீடு மற்றும் விவரக்குறிப்புகக்ள் தயாரிக்கப்படாததுடன் பெறுகை வழிகாட்டல்களின் 2.14 ஆம் பிரிவின் பிரகாரம் கூறுவிலைகள் கோரப்படவில்லை. மேலும், கேள்விப் பிணைகள் மற்றும் உத்தரவாதக் காலம் தொடர்பாக உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தத் தவறியமை மற்றும் உள்ளூர் முகவர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படாததன் காரணமாக உள்ளூர் முகவரின் விலையை விட அதிகமாக ரூபா 247,667 செலுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. | அரசாங்கத்தின் பெறுகை நடைமுறைகளின் வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான சிக்கல்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தலைமை அலுவலகத்தில் (PMU) பிரதி செயற்திட்ட பணிப்பாளர் பதவி 2021 திசெம்பர் 16 முதல் 2022 திசெம்பர் வரை வெற்றிடமாக இருந்தது, மேலும் செயற்திட்டத்தின் கொள்கை நிபுணர் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் பதிற்கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டார். அந்தக் காலப்பகுதியில் பதிற்கடமை படிகளாக ஏறத்தாழ ரூபா 575,000 செலுத்தப்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.<br><br>வெற்றிடமாக உள்ள பிரதி செயற்திட்ட பணிப்பாளர் பதவிக்கு பதிற்கடமையாற்றுவதற்காக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டார். ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன, ஆனால் இந்த காலப்பகுதியில் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக ஆட்சேர்ப்பு எதுவும் செய்யப்படவில்லை. மேலும், அரசாங்க உத்தியோகத்தர்களில் இருந்து வெற்றிடமாக உள்ள செயற்திட்ட பதவியணியினரை நிரப்புவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதன் பிரகாரம் இந்த பதவிக்கு அமைச்சிலிருந்து ஒரு உத்தியோகத்தர் விடுவிக்கப்படும் வரை, பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் தொடர வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் விவசாய அமைச்சிலிருந்து விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் இந்தப் பதவி தற்போது நிரப்பப்பட்டுள்ளது. பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை ஆதரவு பகுதிக்கு பொறுப்பான உத்தியோகத்தர் தனது பொறுப்புக்களை நிறைவேற்றினார், மேலும், ஆண்டின் போது பங்குதாரர்களுடன் கொள்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டது. | வெற்றிடங்களை உடனடியாக நிரப்பி, செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டும். |
| (ஆ) | கொள்கை நிபுணருக்கு ஒதுக்கப்பட்ட முக்கிய கடமை பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை ஆதரவாக இருந்ததுடன் தேசிய கொள்கையாக கூறின் கீழ் செயற்திட்டத்தால் அடையாளம் காணப்பட்ட கொள்கைகளை வெளிப்படுத்துதல் மற்றும் தேவையான துணை நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் என்பன 2022 திசெம்பர் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தொடர்புடைய கொள்கை உருவாக்கத்திற்கான உடன்படிக்கையை ஏற்பாடு செய்யும் போது ரூபா 65.58 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு ஒரு விளைவற்ற செலவினமாக இருந்தது. | விவசாய அமைச்சு மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் இரண்டு கூறுகளாக செயற்திட்டத்தை அமுல்படுத்துவது அமைச்சரவை மற்றும் உலக வங்கியின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இரண்டு கூறுகளும் மிக நெருக்கமாகச் செயற்படுவது மட்டுமல்லாமல், கூறு 01 இன் செயற்திட்டப் பணிப்பாளர் சமீப காலம் வரை கூறு 02 இன் வழிநடாத்தல் குழு உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றினார். மேலும், விவசாய வணிக கம்பனிகளுடன் கூறு 02 இன் கீழ் அமுல்படுத்தப்பட்ட கொத்தணிகளால் பல வாங்குதல் - திரும்புதல் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>தயாரிப்புக்களுக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்துவதற்காக கூறு 01 ஆல் ஆதரிக்கப்படுகிறது. | தேவையான துணை நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கான தேசியக் கொள்கை மற்றும் வேலை என்ற கூறின் கீழ் பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை ஆதரவு மற்றும் செயற்திட்டத்தால் அடையாளம் காணப்பட்ட கொள்கைகளை உருவாக்குதல். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்டத்தின் சமூகத் திரட்டுபவரை (Social Mobilizer) ஆட்சேர்ப்பு செய்வதற்கான கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகைமைகளைக் கருத்தில் கொள்ளாமலும் ஒரே நேரத்தில் விண்ணப்பங்களை அழைக்காமலும் மத்திய மாகாண அலுவலகங்களுக்கு மாதாந்தம் ரூபா 70,000 கொடுப்பனவு அடிப்படையில் ஒரு ஊழியர் 02 ஆண்டுகளிற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். அந்த 02 வருடங்களுக்கு ரூபா 1,680,000 செலுத்துவதற்கு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சேவை வழங்குநரால் வழங்கப்பட்ட தகைமைகளை சரிபார்ப்பதற்கும் செயற்திட்டங்கள் தவறியிருந்தன. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் ஏற்கப்படுகின்றன.<br><br>கூறுவிலைகளை கோருவதன் மூலம் சமூக ஒருங்கிணைப்பாளர் தெரிவுசெய்யப்பட்டதுடன் அவர் வழங்கிய ஆவணங்கள் சரியானவை என்று நம்பி, சம்பந்தப்பட்ட நபருக்கு உரிய பணி வழங்கப்பட்டது. அவர் போலி ஆவணங்களைத் தயாரித்தது தெரிந்தவுடன், அவருடனான சேவை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது.<br><br>இந்நிலைமைக்குப் பின்னர், அனைத்து மாகாண பிரதிப் பணிப்பாளர்களுக்கும் கேள்வி ஆவணங்களை ஆராய்ந்து சரிபார்ப்பதில் சிரத்தையையும் உரிய கவனத்தையும் பேணுவதன் அவசியம் அறிவுறுத்தப்பட்டது. | செயற்திட்டத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். |